முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்.

முன்னிலை:-செல்வி.எஸ்.பத்மாவதி .ML .,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சிதம்பரம்.

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ம் நாள் திங்கட்கிழமை

நி.வி.எண்.38/2025 இன் நி.ம.எண்.109/22 அ.வ.எண்.20/2021

முருகன் ..... மனுதாரர்/எதிர்மனுதாரர்

/எதிர்/

ராமலிங்கம் ...... எதிர்மனுதாரர் / மனுதாரர்

இம்மனு கடந்த 10.11.2025 அன்று என் முன்னர் இன்று இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.T.விஜயகுமார் அவர்கள் அஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G. விஜயலட்சுமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டு, ஆவண்ங்களை பரிசீலணை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலணைகுட்பட்டு, இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 151 கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்</u>

மனுதாரர் நிறைவேற்று மனுவில் எதிர்மனுதாரர் என்றும், மனுவில் எதிர்மனுதாரர்/தீர்ப்பு பெற்றவரால் தன்னை கைது செய்ய நிறைவேற்று மனு தாக்கல்

செய்து தான் ஆஜராவதற்காக கடந்த 18.03.2025 அன்று இருந்தாகவும், தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தனது வழக்கறிஞரை சந்திக்கவும் இயலவில்லை என்றும், நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும், நீதிமன்றத்தில் அவர்கள் தங்களை அழைத்த போது தான் ஆஜராகாததால் தனக்கு எதிர்மனுதாரருக்கு எதிராக மேற்படி தேதியில் வழக்கு Exparte உத்தரவு செய்யப்பட்டு தனது தரப்பு வாதுரை கேட்கப்படாமல் close செய்யப்பட்டுள்ள விபரம் பற்றி தனது வழக்கறிஞர் மூலமாக அறிந்ததாகவும், தான் மேற்குறிப்பிட்ட தவிர்க்க முடியாத காரணங்களைத்தவிர வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ, இல்லை என்றும், கைது உத்தரவு செய்யப்பட்டால் தனக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்றும், கடந்த 13.08.2024 தேதியில் தனது தரப்பில் முடிக்கப்பட்டு வழக்கறிஞர் வாதுரைக்காக வாய்தா உள்ளதை மீண்டும் Reopen செய்தால் மட்டுமே வழக்கில் உண்மை நிலையை நீதிமன்றத்தில் உரிய சாட்சியங்கள் மற்றும் மேல்முறையீட்டு வழக்கின் உத்தரவுகளுக்களுக்கு பின்னரே முடிவு செய்ய வேண்டியது என குறிப்பிடப்பட்டுள்ளது.

3, <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்த ஆட்சேபனையின் சுருக்கம்</u>

மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் முற்றிலும் பொய் என்றும், ஏற்புடையது அல்ல என்றும், ஆட்சேபணையில் வெளிப்படையாக ஒப்புக்கொணட அம்சங்கள் தவிர மற்றவை குறிப்பாக மறுக்கப்படுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுதாரர் மனுவை மிக்க கால தாமதத்துடன் தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் தரப்பில் கடந்த 18.03.2025 தேதியன்று எதிர்மனுதாரர் தரப்பு விசாரணைக்காக இருந்தது என்றும், அதற்கு முன்னமே நிறைய தேதிகள் எதிர்மனுதாரரால் வாய்தா வாங்கப்பட்டு விசாரணையானது எதிர்மனுதாரர் தரப்பினால் கால தாமதப்படுத்தப்பட்டது என்றும், மனுதாரர் இந்த மனுவினை எதிர் மனுதாரரை அலைகழிப்பதற்காகவும், விசாரணையை வேண்டுமெனறே தள்ளி போடுவதற்காகவும் தாக்கல் செய்துள்ளதாவும் என மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு செய்யுமாறு வேண்டடப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சிய சான்றாவணம் தாக்கல் இல்லை.

5. மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், மனுதாரர் தாக்கல் செய்த மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**6. தீர்வு :**

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. நிறைவேற்று மனு பிடிவாரண்டுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்/தீர்ப்பு பெற்றவரால் தன்னை கைது செய்ய நிறைவேற்று மனு தாக்கல் செய்து தான் ஆஜராவதற்காக கடந்த 18.03.2025 இருந்தாகவும், தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தனது வழக்கறிஞரை சந்திக்கவும் இயலவில்லை என்றும், நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும்,

நீதிமன்றத்தால் நிறைவேற்று மனுவில் முடிக்கப்பட்ட எதிர்மனுதாரர் தரப்பு வாதுரையை மீண்டும் திறக்கக்கோரி வேண்டப்பட்டுள்ள நிலையில் **மாறாக,** எதிர்மனுதாரர் தரப்பில் மனு மிக்க கால தாமதத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிர்மனுதாரர் தரப்பு விசாரணைக்காக 18.03.2025 தேதியிட்டு முன்னமே நிறைய தேதிகள் எதிர்மனுதாரரால் வாய்தா வாங்கப்பட்டு விசாரணையானது எதிர்மனுதாரர் தரப்பினால் கால தாமதப்படுத்தப்பட்டது என்றும், மனுதாரர் இந்த மனுவினை எதிர் மனுதாரரை அலைகழிப்பதற்காகவும், விசாரணையை வேண்டுமெனறே தள்ளி போடுவதற்காகவும் தாக்கல் செய்துள்ளதாகவும், நிறைவேற்று மனுவை மீண்டும் திறக்க மனுதாரர் மனுவில் சரியான காரணங்கள் குறிப்பிடவில்லை என்று ஆட்சேபிக்கப்பட்டுள்ளதையும், கருத்தில் கொண்டு மனு கோப்புகளை பரிசீலனை செய்ததில், 27.7.2023 முதல் 20.11.2023 எதிர்மனுதாரர் தரப்பு விசாரணைக்காக பல வாய்தாக்கள் கொடுக்கப்பட்டு, 02.08.2024 தேதியிலும், மீண்டும் 18.03.2025 அன்றும் எதிர்மனுதாரர் தரப்பு விசாரணைக்கு தயாராக இல்லாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டு உத்தரவுக்காக வாய்தா போடப்பட்டிருந்ததை அறிய முடிகிறது. எதிர்மனுதாரர் தரப்பில் விசாரணைக்கு ஒரு வாய்ப்பு அளிக்கும்முகமாக இம்மனுவினை நிபந்தனைகளுடன் அனுமதிக்கலாம் என நீதியின் நலன் கருதி இந்நீதிமனறம் தீர்மானித்து.

7. இறுதியாக, மனு அனுமதிக்கப்படுகிறது. வாய்தா தேதியில் விசாரணைக்கு மனுதாரர் தயாராக இருக்க வேண்டும் என்றும், மனுதாரர்கள் செலவுத்தொகையாக

ரூ.1000/- யை எதிர்மனுதாரருக்கு 28.11.2025 அன்றோ அல்லது அதற்குள்ளாகவோ செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சொல்ல சொல்ல சுருக்கெழுத்து தட்டச்சரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள்17-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-S.Padmavathi)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சிதம்பரம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :- இல்லை

(Sd/-S.Padmavathi)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சிதம்பரம்.

அசல்-நகல்-உத்தரவு

வ.வி.எண்.38/2025

இன்

நி.ம..எண்.109/2022

அ.வ.எண்.20/2021

நாள்.17.11.2025